முன்னிலை: திரு.சதாம்உசைன், B.A.,L.L.B.,
(மு.கூ.பொ) குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.133/2023

அ.சா.4

2026-ம் ஆண்டு ஜூலை 20-ம் தேதி திங்கள்கிழமை அரசு தரப்பு சாட்சி -4 வது நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோவிந்தராஜ் | தொழில் | |
| தந்தை பெயர் | முத்துசாமி | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.30 மணி,

Accused A1)Karthik, A2)Kumaresan present. Advocate Mr.Kaviselvan present for Advocate Mr.Balu for both accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் தற்போது தராமங்கலம் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.04.2022-ம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்த கோவிந்தன் என்பவரது கையெழுத்து எனக்கு நன்கு தெரியும். வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டு ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 27.04.2022-ம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.கோவிந்தன் என்பவர் நிலைய அலுவலில் இருந்த போது 16.00 மணியளவில் அதற்கு முன்னதாக ஓமலூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் தலைமை காவலர் சேகர் என்பவர் அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த சாட்சி சண்முகம் என்பவரை 15.00 மணியளவில் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து ஆஜர் செய்த புகார் வாக்குமூலத்தின் பேரில் நிலைய குற்ற எண்.242/2022 சட்டபிரிவுகள் 323, 427, 379 இதச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **(அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1, முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

SADHAMHUSAIN S
Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.20 17:20:55 +0530

3. பின்பு வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு அன்றைய தினமே 17.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் சக்திவேல் மற்றும் வெங்கடேஷ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். (**அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.3, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

4. பின்பு சாட்சிகள் 1 முதல் 6 வரை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 04.05.2022 ஆம் தேதி சின்னப்பம்பட்டி பேருந்து நிறுத்தம் அருகே வைத்து எதிரிகள் குமரேசன் மற்றும் கார்த்திக் ஆகிய இருவரையும் காலை 11.00 மணியளவில் கைது செய்து நிலையம் கொண்டு வந்து தக்க பிணையில் விடுவித்துள்ளார். பின்பு சம்பவத்தில் காயமடைந்த சாட்சி சண்முகம் என்பவருக்கு முதல் சிகிச்சை அளித்து காயச்சான்றிதழ் வழங்கிய ஓமலூர் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.பெருமாள் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று பெற்றுள்ளார். (**அந்த விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

5. பின்பு சம்பவத்தில் காயமடைந்த சாட்சி சண்முகம் என்பவருக்கு மேல்சிகிச்சை அளித்து காயச்சான்றிதழ் வழங்கிய சேலம் அரசு மருத்துவமனை மருத்துவர் சுரேஷ் குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, காயச்சான்று பெற்றுள்ளார். (**அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள விபத்து பதிவேட்டின் பின்னால் வழங்கப்பட்டுள்ள காயச்சான்று அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. )

6. பின்பு புலன் விசாரணை முடிவுகளின் அடிப்படையில் வழக்கின் சட்டப்பிரிவுகளை 323, 427, 379 இதச விலிருந்து 294(பி), 323 இதச ஆக மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். ( **அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)

7. பின்பு தலைமை காவலர் சேகர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு வழக்கின் புலன் விசாரணை முடித்து சம்பவம் நடந்தது உண்மையென தெரியவந்ததால் எதிரிகளின் மீது நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

SADHAMHUSAIN S
Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.20 17:20:58 +0530

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

8. இந்த வழக்கின் விசாரணை அதிகாரி நான் இல்லை. விசாரணை அதிகாரி சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது பொய்யாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**. இல்லை.

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 12.46 மணி.**

SADHAMHUSAIN S

Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.20 17:21:02 +0530